**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 19 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.10/2025 மற்றும் 11/2025**

IN

**அசல் வழக்கு எண்.237/2014**

1. பரமு அம்மாள் (இறந்தவர்)
2. சுவாமிநாதன்
3. கோமதிநாயகம் பாண்டியன்
4. முத்துக்குமார்
5. ராமையா (இறந்தவர்) .... 1 முதல் 5 மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

6. செண்பகராஜன் ...6 ம் மனுதாரர்/ உத்தேச 6 ம் வாதி

1. கோட்டைச்சாமி
2. முத்துக்குமார்
3. கிருஷ்ணசாமி ....எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 15.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதார்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 5 மற்றும் கட்டளை 22 விதி 3 பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கில் 11.04.2024, 03.11.2024 ஆகிய தேதிகளில் இறந்துபோன 1ம் மனுதாரர் மற்றும் 5ம் மனுதாரருக்கு ஏற்கனவே அவர்களின் மக்களான 2 முதல் 4 மனுதாரர்கள் வழக்கில் பதிவில் இருந்து வருவதால், பிரிதொரு மகனான 6ம் மனுதாரர்/உத்தேச 6ம் வாதியை வாரிசாக கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 121 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இவ்வழக்கில் வாரிசு நிலையில் அசல் வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.10/2025 மற்றும் 11/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–**

மனுதார்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கை 1ம் வாதி, 5ம் தபசில் மற்றும் 7ம் தபசில் சொத்தையும், 2ம் வாதி, 2ம் தபசில் சொத்தையும், 3ம் வாதி 3ம் தபசில் சொத்தையும், 4ம் வாதி 4ம் தபசில் சொத்தையும், 5ம் வாதி 6ம் தபசில் சொத்தையும் அமைதியாக அனுபவம் செய்து வருவதையும், பிராதின் தபசில் சொத்துக்களை 1ம் பிரதிவாதி 11.12.2008 தேதியில் பெற்ற பதிவு கிரைய ஆவணமும், 29.05.2009 தேதியில் பெற்ற சீர்திருத்த ஆவணமும் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் மற்றும் பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை 1 முதல் 5 வாதிகள் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அசல் வழக்கில் 1 முதல் 5 மனுதாரர்கள் தரப்பில் பதில் எதிர்வழக்குரையை ரிசிவ் செய்து கொள்ள வ.வி.எண்.6/2024 மனு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது, 6ம் மனுதாரருக்கும், 2 முதல் 4 மனுதாரர்களுக்கும் தாயாரான 1ம் மனுதாரரான 1ம் வாதி கடந்த 11.04.2024 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 1ம் மனுதாரருக்கு 6ம் மனுதாரரும், 2 முதல் 5 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், 6ம் மனுதாரருக்கும் 2 முதல் 4 மனுதாரர்களுக்கும் தாயாரான 1ம் மனுதாரர் இறந்தவுடன் மனுதாரர்களுக்கு மிகுந்த மன வருத்தம் ஏற்பட்ட நிலையில் 6ம்

மனுதாரருக்கும், 2 முதல் 4 மனுதாரர்களுக்கும் தந்தையான 5ம் மனுதாரரான 5ம் வாதியும் மோசமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வந்த காரணங்களினாலும் 1ம் மனுதாரர் இறந்த விபரத்தை உடனடியாக வழக்கறிஞரிடம் கூறி மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விபரம் 6ம் மனுதாரருக்கு தெரியாததினாலும், உரிய காலத்தில் இந்நீதிமன்றத்தில் 11.04.2024 தேதியில் இறந்துபோன 1ம் மனுதாரருக்கு மேல் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது என்றும், அசல் வழக்கை வழக்கறிஞரை சந்தித்து 3ம் மனுதாரர் நடத்தி வருவதோடு, வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1ம் மனுதாரர் இறந்த விபரத்தை வழக்கறிஞரிடம் தெரிவிக்காமல் இருந்த தவறு எங்களால் வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்றும், தங்களை அறியாமல் ஏற்பட்டுவிட்டது என்றும், அதன் பின்னீடு தங்களின் தந்தையான 5ம் மனுதாரர் 03.11.2024ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 5ம் மனுதாரருக்கு 2 முதல் 4 மனுதாரர்களும் மற்றும் ஒரு மகனான 6ம் மனுதாரரும் வாரிசுகள் என்றும், இறந்துபோன 1, 5 மனுதாரர்களின் வாரிசுகளான 2 முதல் 4 வாதிகளாக ஏற்கனவே வழக்கில் பதிவில் இருந்து வருவதால், இவ்வழக்கில் இறந்துபோன 1, 5 மனுதாரர்களின் மற்றொரு வாரிசான 6ம் மனுதாரரை மட்டும் வழக்கில் வாரிசு நிலையில் கட்சியாக சேர்த்துக்கொண்டால் போதுமானதாக உள்ளது என்றும், இறந்துபோன 1, 5 வாதிகளின் இதர வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் இவ்வழக்கில் பதிவில் இருந்து வருவதால் இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு 6ம் மனுதாரரை கட்சியாக சேர்த்துக் கொள்ள தாக்கல் செய்திருந்த வ.வி.எண்.7/2025 மற்றும் 08/2025 மனுக்களின் காரணமாக, மேற்படி இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு வாரிசு நடவடிக்கை எடுப்பத்தில் 121 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு 6ம் மனுதாரரை வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கையில் ஏற்பட்ட காலதாமதம் மனப்பூர்வமாக ஏற்பட்டதில்லை என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 1ம் வாதி மற்றும் 5ம் வாதிக்கு பிரதான வழக்கிலும் வ.வி.எண்.6/2024 மனுவிலும் 6ம் மனுதாரரை புதிதாக கட்சி சேர்த்துக் கொள்ள முன்னர் தாக்கல் செய்திருந்ததை, வ.வி.எண்.7/2025 மற்றும்

வ.வி.எண்.8/2025 மனுக்களை இந்நீதிமன்றம் 05.04.2025 தேதியில் தள்ளுபடி செய்து, மேற்படி இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளது என்றும், மேலும் இறந்துபோன 1, 5 வாதிகளின் இதர வாரிசுகளான 2 முதல் 4 வாதிகளாக இவ்வழக்கில் பதிவில் இருந்து வருவதால் வாரிசு சேர்க்கும் நடவடிக்கையில் அபெட்மெண்ட் ஏற்படவில்லை என்றும், இம்மனுவில் 6ம் மனுதாரரை இறந்துபோன 1, 5 வாதிகளின் வாரிசு நிலையில் 6ம் வாதியாக கட்சி சேர்த்துக் கொள்ள மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 121 நாட்கள் காலதாமதத்தை மன்னித்துக் கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், இறந்துபோன 1ம் வாதி 5 மற்றும் 7 தபசில் சொத்துக்களைப் பொறுத்தும், இறந்துபோன 5ம் வாதி 6வது தபசில் சொத்தைப் பொறுத்தும் யாதொரு ஏற்பாடும் அன்னியில் இறந்துபோய் விட்டார்கள் என்றும், மேற்படி 5, 7 மற்றும் 6 தபசில் சொத்துக்களைப் பொறுத்து இறந்துபோன 1 மற்றும் 5 வாதிகளின் வாரிசுகள் 2 முதல் 4 வாதிகளாக ஏற்கனவே பதில் இருந்து வருகிறார்கள் என்றும், மேற்படி 5, 7 மற்றும் 6 தபசில் சொத்துக்களைப் பொறுத்து இறந்துபோன 1, 5 வாதிகளின் பிரிதொரு மகனான 6ம் மனுதாரரை இவ்வழக்கில் வாரிசு நிலையில் கட்சி சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்திக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், ஆகையால் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இ.ம.எண்.10/2025 மற்றும் 11/2025—ன் எதிருரைகளின் சுருக்கம்:—</u>

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தரப்பில் விசாரணை முடிந்த பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்ததில் கடந்த 09.02.2023ல் 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த 09.02.2023 பின்பாக பி.வா.சா.1—ஐ

குறுக்கு விசாரணை செய்வதற்காக 18.02.2023 ல் வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், அதன் பின்னிட்டு வாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக சுமார் 25 வாய்தாக்கள் வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், பி.வா.சா.1–ஐ முதல் விசாரணை செய்த பின்பாக சுமார் 1 1/2 ஆண்டு காலம் வாதிகள் தரப்பில் வாய்தாக்கள் பெறப்பட்டு, பின்னர் 1ம் வாதி மற்றும் 5ம் வாதிக்கு கடந்த 19.09.2024 ல் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் 05.04.2025 அன்று தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிட்டது என்றும், இந்த மனுதாரர்களில் 6ம் மனுதாரர் கோமதிநாயகப்பாண்டியன் என்பவர் தாக்கல் செய்த வ.வி.எண்.6/2024 மனு இன்னமும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுவில் இம்மனுவை உத்தேச 6ம் மனுதார் தாக்கல் செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்றும், மேற்படி உத்தேச 6ம் மனுதாரர் பிரதாக வழக்கில் இன்னமும் வாரிசாக சேர்க்கப்படவே இல்லை என்றும், ஏற்கனவே 2,3,4 மனுதாரர்கள் இவ்வழக்கில் பதிவில் இருந்து வருகின்றார்கள் என்றும், மேற்படி 2, 3, 4 மனுதாரர்கள் இம்மனுக்களை இந்நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றும், ஆனால் முன்பு தாக்கல் செய்த மனுக்கள் மற்றும் முதல்நிலைய சாட்சியம் அனைத்திலும் 3ம் மனுதாரரே மற்ற மனுதாரர்களுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும், தற்போது இந்த 6ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்வதற்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றும், மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ள இந்த மனுதாரர்கள் இறந்துபோன 1ம் வாதி மற்றும் 5ம் வாதிக்கு மனு தாக்கல் செய்துள்ள காலதாமத நாட்கள் தவறானது என்றும், ஆனால் இவ்வழக்கில் வாதிகள், வாதிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 09.02.2023 ல் முதல் நிலை சாட்சியம் அளித்த பின்பாக குறுக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் பெறப்பட்டு அதன் பின்னீட்டு 2 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலங்கள் கழித்து இம்மனுவையும் இந்த அவிடவிட்டையும் தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்விதமான சட்டப்படியான உரிமையும், சட்ட அனுமதியும் கிடையாது என்றும், வாதிகள் தரப்பு சாட்சியை பிரதிவாதிகள்

தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக அனேகமான சாட்சியம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியத்தை அழிக்கும் முகமாக மனுதாரர்கள் பொய்யான காரணங்களை கூறியும் இவ்வழக்கை மேல்நடத்தாமல் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர்கள் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற பின்பாக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலமையிலும், குறுக்கு விசாரணைக்காக சுமார் 20 மாதங்கள் வாய்தா பெறப்பட்டு அதன் பின்னிட்டு இம்மனுவையும், இந்த அவிடவிட்டையும் தாக்கல் செய்வதற்கு இந்த மனுதாரர்களுக்கு எவ்விதமான சட்டப்படியான உரிமையும், அனுமதியும் கிடையாது என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுக்களானது மனுதாரர்கள்/வாதிகளால், 11.04.2024, 03.11.2024 ஆகிய தேதிகளில் இறந்துபோன 1ம் மனுதாரர் மற்றும் 5ம் மனுதாரருக்கு ஏற்கனவே அவர்களின் மக்களான 2 முதல் 4 மனுதாரர்கள் வழக்கில் பதிவில் இருந்து வருவதால், பிரிதொரு மகனான 6ம் மனுதாரர்/உத்தேச 6ம் வாதியை வாரிசாக கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 121 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இவ்வழக்கில் 6ம் மனுதாரர்/உத்தேச 6ம் வாதியை வாரிசு நிலையில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில், இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு வாரிசு நடவடிக்கை எடுப்பத்தில் 121 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு 6ம் மனுதாரரை வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கையில் ஏற்பட்ட காலதாமதம் மனப்பூர்வமாக ஏற்பட்டதில்லை என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 1ம் வாதி மற்றும் 5ம் வாதிக்கு பிரதான வழக்கிலும் வ.வி.எண்.6/2024 மனுவிலும் 6ம் மனுதாரரை புதிதாக கட்சி சேர்த்துக் கொள்ள முன்னர் தாக்கல் செய்திருந்ததை, வ.வி.எண்.7/2025 மற்றும் வ.வி.எண்.8/2025 மனுக்களை இந்நீதிமன்றம் 05.04.2025 தேதியில் தள்ளுபடி செய்து, மேற்படி இறந்துபோன 1, 5 வாதிகளுக்கு வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளது என்றும், மேலும் இறந்துபோன 1, 5 வாதிகளின் இதர வாரிசுகளான 2 முதல் 4 வாதிகளாக இவ்வழக்கில் பதிவில் இருந்து வருவதால் வாரிசு சேர்க்கும் நடவடிக்கையில் அபெட்மெண்ட் ஏற்படவில்லை என்றும், இம்மனுவில் 6ம் மனுதாரரை இறந்துபோன 1, 5 வாதிகளின் வாரிசு நிலையில் 6ம் வாதியாக கட்சி சேர்த்துக் கொள்ள மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 121 நாட்கள் காலதாமதத்தை மன்னித்துக் கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், 5, 7 மற்றும் 6 தபசில் சொத்துக்களைப் பொறுத்து இறந்துபோன 1, 5 வாதிகளின் பிரிதொரு மகனான 6ம் மனுதாரரை இவ்வழக்கில் வாரிசு நிலையில் கட்சி சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்திக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) இம்மனுக்களின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் உத்தேச 6ம் மனுதாரர் பிரதாக வழக்கில் இன்னமும் வாரிசாக சேர்க்கப்படவே இல்லை என்றும்,

ஏற்கனவே 2,3,4 மனுதாரர்கள் இவ்வழக்கில் பதிவில் இருந்து வருகின்றார்கள் என்றும், மேற்படி 2, 3, 4 மனுதாரர்கள் இம்மனுக்களை இந்நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றும், இந்த மனுதாரர்கள் இறந்துபோன 1ம் வாதி மற்றும் 5ம் வாதிக்கு மனு தாக்கல் செய்துள்ள காலதாமத நாட்கள் தவறானது என்றும், வாதிகள் தரப்பு சாட்சியை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக அனேகமான சாட்சியம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியத்தை அழிக்கும் முகமாக மனுதாரர்கள் பொய்யான காரணங்களை கூறியும் இவ்வழக்கை மேல்நடத்தாமல் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர்கள் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) இம்மனுக்களின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன 1, 5 மனுதாரர்களுக்கு 6ம் மனுதாரர் வாரிசு அல்ல மறுக்கப்படவில்லை. இந்நிலையில், அசல் வழக்கில் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 1, 5 மனுதாரர்களின் வாரிசான 6ம் மனுதாரரை வாரிசாக கட்சி சேர்க்க அவசியம் என்பதால் இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**9) இறுதியாக**

**இ.ம.எண்.10/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை

1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 23.07.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 23.07.2025.

**<u>இ.ம.எண்.11/2025</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 23.07.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 23.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 19ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.07.19 19:29:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

- இல்லை -

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.07.19 19:29:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.10/2025 and
I.A.No.11/2025
in
O.S.No.237/2014
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 19.07.2025**